**17.03.2020**

## பத்திரிக்கை செய்தி

## சென்னை மெட்ரோ இரயில் பணிகளின் போது இன்று (17.03.2020) அதிகாலையில் தண்டையார்பேட்டையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனை சந்திப்பிற்கு அருகே மண் சரிவு ஏற்பட்டது

வண்ணாரப்பேட்டை முதல் விம்கோ நகர் வரையில் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம் 1-இன் கட்டுமானப் பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகிறது. இந்தக் கட்டுமானப் பணிகளின் ஒரு பகுதியாக அப்பல்லோ சந்திப்புக்கு அருகில் அமையவுள்ள சாய்தளத்திற்கான அடித்தள கான்கீரிட் பலகை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணிகளின் போது அப்பகுதியில் பூமிக்கடியில் செல்லும் குழாய்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாதவாறு உலோகத் தகடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இன்று (17.03.2020) அதிகாலையில் அந்த கட்டுமானப் பகுதிக்கு வெளியே செல்லுகின்ற ஒரு குடிநீர்க் குழாயில், மண் சரிவை தாங்கும் தகட்டிற்கு அருகில் குழாயைச் சுற்றியுள்ள மண்பிடிப்பு இளகியதால் உடைப்பு ஏற்பட்டது. உலோகத் தடுப்புத் தகடுகளை பூமியில் புதைக்கும் போது ஏற்பட்ட அதிர்வினாலும், அதன்பின்னர் கட்டுமானப் பணிகளுக்காக மண் தோண்டப்பட்டதாலும் குழாய்ப் பாதையை தாங்கியிருந்த மண் பகுதியில் சரிவு ஏற்பட்டது.

தண்டையார்பேட்டை பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யும் குழாயில் மிக அழுத்தமான அளவில் தண்ணீர் சென்றதால் தண்ணீர் பீச்சி அடித்ததில் அந்த நிலப்பகுதியில் மண் அரிமானம் ஏற்பட்டது. இந்த அரிமானத்தின் காரணமாக அந்த குழாய்க்கு மேல்பகுதியில் உள்ள மண் உள்வாங்கியது. இதனால் அந்த பகுதியில் அமைந்துள்ள பழைய தேநீர் கடைகளில் ஒன்றிற்கு பலத்த சேதம் ஏற்பட்டது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு அந்த பகுதி தடுப்புகளைக் கொண்டு மூடப்பட்டது. மேலும் மண் உள்வாங்கிய பகுதியில் கான்கீரிட் கலவையை நிரப்பி மேல்பகுதி மறுசீரமைக்கப்பட்டது. உடைபட்ட குழாய்களினால் மேலும் மண் அரிமானம் ஏற்படாதவாறு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் மண் சரிவு ஏற்படாமல் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. அந்த குழாய்ப் பாதையை முழுமையாகச் சீரமைப்பதற்கு முன்னர் தற்காலிகமாக மூடிவைக்குமாறு சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கேட்டுக்கொண்டது. மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான நடவடிக்கையை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. பாதிக்கப்பட்ட கடையை மீண்டும் கட்டி தருவதற்கான நடவடிக்கையையும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மேற்கொள்ளவுள்ளது.